# வீடு

உரிமை வேட்கையின்
உன்னத சின்னம்


எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே - அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே - அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே - இதை
வந்தனை கூறி மனதில் இருத்தி என்
வாயுற வாழ்த்தேனோ





மலர் 01 | வீடு | 10.07.2020 வெள்ளி | இதழ் 01


# தந்தை செல்வாவின் பாதை சாத்வீகப் போராட்டம்
# தலைவர் பிரபாகரனின் பாதை ஆயுதப் போராட்டம்
## ஆயுதப் போராட்டத்தின் தொடர்ச்சியான ஜனநாயகப் போராட்டம் எமது பாதை





பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூனுடனான சந்திப்பு



தமிழர்களைப் பிரித்து பலவீனப்படுத்துவோரை நிராகரிப்போம்



தென்மராட்சி மைந்தனின் நிதி ஒதுக்கீட்டில் கைதடியில் பொது விளையாட்டு மைதானம்



எமக்காக உயிர்நீத்தவர்களுக்காக...


இலங்கை தமிழரசுக் கட்சி

4 X

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

சரசாலையின் மைந்தன்...

ஈ.சரவணபவன்

உதயன் குழுமத் தலைவர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிசை வாழ்வைக் கைவிடுவோம்
# குடியிருக்க வீடமைப்போம்






நாவற்குழி கோவிலாக்கண்டி பகுதியில் நிரந்தர வீடுகள் இல்லாத மக்களுக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அவர்களின் முயற்சியால் அமைக்கப்படும் 58 நிரந்தர வீடுகளுக்கான அங்குரார்ப்பண நிகழ்வு





கைதடி கிழக்கு இராஜபுரி பிரதேசத்தில்கட்டப்படும் 25 வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு



கைதடி கள்ளிநகர் மக்களுடனான சந்திப்பு



மறவன்புலோவில் இடம்பெற்ற சர்வதேச முதியோர்தின நிகழ்வில் கலந்துகொண்டு பெரியோர்களது ஆசியைப் பெற்றுக்கொண்ட தருணம்

நாம் உழைப்பால் உயர்ந்தவர்கள்! வியர்வை சிந்தி உழைத்தோம்! வீடு கட்டி, வேலியிட்டு, தென்னை, வாழை, பலா, எனப் பயிர் செய்து, முற்றத்து மாமரக் கனிகளை பறித்துண்டு வேப்பமர நிழலில் இளைப்பாறி சிறப்பாக வாழ்ந்து வந்தோம்.
ஆக்கிரமிப்பு வெறிகொண்ட அரச படைகள் எங்கள் மீது அநீதிகளை இழைத்தன. வீடுகளின் மேல் விமானக்குண்டுகளை வீசின. எறிகணைகளால் எங்கள் குடியிருப்புகளைச் சிதைத்தன எங்கள் வளங்களை அழித்தன! இடப்பெயர்வுகளால் எங்களை ஊர்ஊராக விரட்டின.

இப்போது மீண்டும் எங்கள் பூமியில்
இடிந்து போன எங்கள் வீடுகள் மீண்டும் எழுகின்றன.
அழிந்த குடியிருப்புகள் மீண்டும் மலர்கின்றன.
மறைந்து போன எங்கள் வாழ்வு மீண்டும் பொலிய வேண்டும்.



நாவற்குழி தெற்கு பிரதேச மக்கள் உடனான சமகால கலந்துரையாடல்

## எங்கள் உரிமையின் சின்னம்
## எங்கள் வெற்றியின் இலக்கம்

வீடு X4

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் பாதுகாப்புக் கவசம் போராளிகளே

## த.தே.கூ. தலைவர் சம்பந்தன் முழக்கம்



"பேரினவாத ஆட்சியாளர்களின் இன வழிப்பு நடவடிக்கையின் போது தமிழ் மக்களின் பாதுகாப்புக் கவசமாகத் திகழ்ந் தவர்கள் எமது போராளிகள்! ஆயுதப் போராட்டம் நயவஞ்சகமான முறையில் மௌனிக்க வைக்கப்பட்ட பின் மாற்று-வழியாக எமது போராளிகள் ஜனநாயக வழியை தெரிந்தெடுத்தமை எமது உரிமைப் போராட்டத்தை முன்கொண்டு செல்வ-தில் உந்து சக்தியாக விளங்கும். அவ் வகையில் ஜனநாயகப் போராளிகள் எமக்கு ஆதரவு வழங்க முன்வந்த மையை மனப்பூர்வமாக வரவேற்கி றோம்", இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்-டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் ஊடகமொன்றுக்கு வழங்கிய பேட்டியின் போது தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசை களை நிறைவேற்றுவதற்காக **தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தை அர்ப்பணிப்புடன் முன்னெடுத்து வெற் றியை நோக்கி நகர்த்திய தலைவர் பிரபாகரன் அவர்களால் உருவாக் கப்பட்ட ஒரேஒரு ஜனநாயக அமைப்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே எனவும், அதை உடைக்க உள்ளேயும் வெளி யேயும் பல சக்திகள் செயற்பட்டு வருகின்றன எனவும், தமிழ் மக்கள் தாயகத்தில் சுதந்திர மக்களாக வாழ வேண்டுமெனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்தி உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டு மெனவும் அண்மையில் ஜனநாயகப் போராளிகள் கட்சியினர் தெரிவித் திருந்தனர்.**

அது பற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் மேற் படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், "தமிழ் மக்களின் பலம் ஒற்றுமையிலேயே தங்கியிருக்கிறது. அதற்கமைய தமிழ் மக்கள் அனைவரையும் ஒன்றிணைக் கும் செயற்பாட்டில் ஜனநாயகப் போரா ளிகள் கட்சியினர் களமிறங்கியிருப்பது ஆரோக்கியமான ஒரு முன்நகர்வா-கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பலப்படுத்துவதன் ஊடாகவே எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்ற உண்மையை ஜனநாயகப் போரா ளிகள் கட்சியினர் ஏனையோருக்கும் உணர்த்தியுள்ளனர்", எனவும் குறிப்பிட் டிருந்தார்.

அத்துடன் வடக்கு கிழக்கில் தமிழ் மக்க ளின் ஏகோபித்த கட்சியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே விளங்குகிறது எனவும்

தமிழ் மக்களின் வாக்குகளை சிதற டிக்கும் நோக்கத்துடனேயே மாற்றுத் தலைமை, மாற்று அணி என வெவ் வேறு கட்சிகளும் சுயேட்சைக்குழுக் களும் தமிழ் மக்களின் வாக்குகளை சிதற டிக்கும் வகையில் போட்டியிட்டு தமிழ் மக்களின் பலத்தை சிதைக்கும் தீய நோக்கத்துடன் செயற்படுகின்றன என வும் அவர் தெரிவித்திருந்தார்.

# மாற்றுத்தலைமையின் பெயரில் தமிழ் மக்களின் ஐக்கியம் குலைப்பு

## தமிழர்களைப் பிரித்து பலவீனப்படுத்துவதை நிராகரிக்க மாவை அழைப்பு



"வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் பாரம் பரிய வாழிடம். எமது பாரம்பரிய தாய கத்தை பாதுகாக்க அகிம்சை வழியிலும் அதனைத்தொடர்ந்து ஆயுதப் போராட்டப் பாதையில் பல அர்ப்பணிப்புகளையும் மேற் கொண்டனர். எமது புனிதமான பூமி சிதைக்கப்படுவதை தடுத்து நிறுத்த எத் தனையோ உயிர்த்தியாகங்களையும் பேரிழப்புகளையும் அனுபவித்தனர். இன்று எமது தாயகத்தைச் சிதைக்க கோத்தபாய தலைமையிலான அரசும் சிங்களக் கடும்போக்காளர்களும் கங் கனம் கட்டி செயற்பட ஆரம்பித்துள்ளனர். அதை நாம் ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. என்ன விலை கொடுத் தெனிலும் எமது தாயக பூமி கபளிகரம் செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்து வோம்", இவ்வாறு தமிழரசுக் கட்சித் தலை வர் மாவை சேனாதிராசா அவர்கள் கடுந்தொனியில் கருத்து வெளியிட்டுள் ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில், "வடக்கு கிழக்கு மாகாணங்களை ஜனாதிபதியின் நேரடிக் கண்காணிப்பில் கொண்டுவர சிங்களக் கடும் போக்காளர்கள் தீவிர முயற்சிகளை எடுத்து வருகின்றனர். தொல்பொருள் உள்ள இடங்களை அடையாளம் காண்பது என்ற பெயரில் புராதன தமிழ் பாரம்பரிய இடங்களை பௌத்த மயப்படுத்தும் நோக்குடன் கிழக்கு மாகாணத்துக்கென அமைக்கப் பட்ட ஜனாதிபதி செயலணி போன்றே வடக்கிலும் நிறுவப்பட வேண்டுமென அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

தமிழர் தாயகத்தை அபகரித்து எமது வரலாற்றுத் தடயங்களை அழித்து திரிபுபடுத்தி இதை பௌத்த சிங்கள வரலாற்றைக் கொண்ட ஒரு தேசமாக காட்டுவதற்கான முயற்சிகள் காலங் காலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின் றன. அதை மேலும் விரிவுபடுத்தும் முகமாக கிழக்கில் தொல்பொருள் இடங்களை அடையாளம் காண பௌத்த பிக்குகளையும், படையதிகாரிகளையும் கொண்ட செயலணி அமைக்கப் பட்டுள்ளது. அதை வடக்குக்கும் விஸ் தரிக்க வேண்டுமென சிங்களக் கடும் போக்காளர்கள் கடும்முயற்சிகளை எடுத்து வருகின்றனர். வடக்கிலும் சரி கிழக்கிலும் சரி இத்தகைய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக நாம் கடும் எதிர்ப்பை தெரிவிப்பதுடன் அவற் றுக்கு எதிரான போராட்டங்களை முன் னெடுக்கவும் தயங்கமாட்டோம் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்", எனவும் சங்கற்பம் செய்தார்.

## சரவணபவனின் 35 இலட்சம் நிதி ஒதுக்கீட்டில்

## கைதடி தொடக்கம் எழுதுமட்டுவாள் வரை ஒளி வெள்ளம்

### உறங்கிக்கிடந்த பணி மீண்டும் தொடங்கியது



கடந்த நல்லாட்சி அரசாங்க காலத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட தேர்தல் தொகுதிகளுக்கான அபிவி ருத்தி நிதியில் கைதடியிலிருந்து எழுது மட்டுவாள் வரையிலான ஏ9 வீதிக்கு மின்விளக்குகள் பொருத்தி ஒளியேற்ற வென முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர் களால் ரூபா 35 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனினும் கொரோனா நோய்ப்பரவல் காரணமாக இந்த அபிவி ருத்திப் பணி இடை நிறுத்தப்பட்டிருந்தது. நீண்ட துாரத்தைக் கொண்ட இப்பகுதிக் கான வீதி விளக்குகளை அமைக்கும் பணி சரவணபவன் அவர்களின் தளராத முயற்சியின் பயனாக மீண்டும் ஆரம்பிக் கப்பட்டு தொடர்கிறது.

கைதடியிலிருந்து நாவற்குழி வரையான நெடுஞ்சாலையில் பெரும் பாலங்கள் சாவகச்சேரி, கொடிகாமம் என்ற இரு நகரங்கள், இரு பிரதான சந்தைகள் பிரபல கல்லூரிகள், மருத்துவமனை கள், பிரதேச சபைக் காரியாலயங்கள், நூால் நிலையங்கள், வங்கிகள் எனப் பல பிரதான மையங்கள் அமைந்துள் ளன. அதிகமான சன நடமாட்டம் நிறைந்த இந்த வீதியில் மின்னொளி பொருத் தப்பட வேண்டுமென்பது மக்களின் நீண்ட காலக் கோரிக்கையாக அமைந்-திருந்தது.

மக்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அவர்கள் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பெருந்தொகையை வழங்கி இப்பணியை ஆரம்பித்து வைத்தார்.

கொரோனா காரணமாக இடைநிறுத்தப் பட்டிருந்த இப்பணி மீண்டும் ஆரம்பிக் கப்பட்டதையிட்டு மக்கள் தமது மகிழ்ச் சியைத் தெரிவித்ததுடன் இவ்விடயம் தொடர்பாக அக்கறை செலுத்தி அதை மீண்டும் ஆரம்பித்து வைத்தமைக்காக சரவணபவன் அவர்களுக்கு தமது பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரி வித்துள்ளனர்.

**அரசியல் என்பது இரத்தம் சிந்தாத யுத்தம்**
**யுத்தம் என்பது இரத்தம் சிந்துகின்ற அரசியல்**
**நாம் இரத்தம் சிந்தும் அரசியலைத் தொடர்ந்து**
**இரத்தம் சிந்தாத யுத்தத்தை முன்னெடுப்பவர்கள்**

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - ஒற்றுமை நீங்கின் அனைவருக்கும் தாழ்வு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முளையிலேயே உரமூட்டி வளர்க்கப்படும் விளையும் பயிர்கள்



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்
அவர்களின் 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில்
அமைக்கப்பட்ட மட்டுவில் தெற்கு வளர்மதி முன்பள்ளி
சிறுவர் பூங்கா திறந்துவைக்கப்பட்டது



கொடிகாமம் அல்லாரை ஐங்கரன் முன்பள்ளி
ஸ்தாபகர் விழாவில் மண்ணின் மைந்தன் சரவணபவன்





முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்
அவர்களின் 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மட்டுவில்
தெற்கு இலுப்பையடி இணைப்பு வீதி முதன்முறையாக தார்
வீதியாக்கப்பட்டது



கைதடி மத்தி குமரநகர் சனசமூக நிலையத்தின் பொங்கல்
விழாவில் பிரதம விருந்தினராக...



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்
அவர்களின் 2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மட்டுவில் தெற்கு
கலைவாணி சனசமூக நிலையத்திற்கு நீர் சுத்திகரிக்கும் இயந்திரம்
வழங்கப்பட்டது



நாவற்குழி கோவிலாக்கண்டி பிரதேச முன்பள்ளி சிறுவர்களின்
மகிழ்களம் நிகழ்வில்...





4 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கைதடி நுணாவில் சனசமூக
நிலைய அபிவிருத்தி



நாவற்குழி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 58 ஆவது ஆண்டு
நிறைவு விழாவை முன்னிட்டு சரஸ்வதி விளையாட்டுக்கழகம் வட
[illegible] ரீதியாக நடத்திய சைக்கிள் ஓட்டப் போட்டியில்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமத்தைத் தலையில் தாங்கிய தென்மராட்சி

சூரியக்கதிர் படை நடவடிக்கை மூலம் இராணுவத்தினர் யாழ்.குடாநாட்டைக் கைப் பற்ற விமானத் தாக்குதல்கள், எறிகணை வீச்சுக்கள் என மக்கள் மீது பெரும் கொலை வெறியாட்டம் போட்டபடி மூர்க்கத்தனமாக முன்னேற முயன்ற நாட்கள் அவை.

சூரன் போர் நாளன்று உபவாசமிருந்து கந்தசட்டி விரதத்தை அனுஷ்டித்துவிட்டு அடுத்த நாள் அதிகாலையில் பாறணையை முடித்துக்கொண்டு நிமிர்ந்தபோது எறிகணைப் பொழியல் மெல்ல மெல்ல வலுவடைகிறது. பலாலியிலிருந்து முன்னேறிவந்த படையினரை பல்வேறு இடங்களிலும் போராளிகள் எதிர்த்துப் போரிட்டு தடுத்து நிறுத்தியபோதும் படையினர் மக்கள் மீதான விமானத் தாக்குதல்களையும் ஏறிகணை வீச்சுக்களையும் அதிகரிக்கின்றனர்.

உயிர் காக்க வேறு வழியற்ற நிலையில் வலிகாமத்தை விட்டு எமது மக்கள் வெளியேற ஆரம்பிக்கின்றனர். ஒரே நாளில் 5 இலட்சம் மக்கள் இடம்பெயரும் அதிசய வரலாறு அரங்கேறுகிறது. எங்கு போவது? எங்கு தங்குவது? அடுத்த வேளை உணவுக்கு என்ன செய்வது? எதுவும் தெரியாத நிலையிலும் 5 இலட்சம் மனித ஜீவன்கள் வலிகாமத்தை விட்டு வெளியேறுகின்றனர். அகலம் குறைந்த வீதி, அருகில் சேறு நிறைந்த நீர், சிலர் மட்டும் ஒரு ரோட்டைக் கடக்கக்கூடிய செம்மணிப்பாலம், மேலே விமானங்களின் மிரட்டல், ஏறிகணைகளின் உறுமல்.

அவலமும், எதிர்பாராத துயரமும் சுமந்து வந்த வலிகாமம் மக்களை அரவணைத்து ஆதரவளிக்கிறது தென்மராட்சி! நகரம், கிராமங்கள், பற்றைத்திட்டிகள், நடந்த இடங்கள் எங்கும் கொட்டில்களும், கூடாரங்களும் முளைக்கின்றன. நெருக்கடியில் தவிக்கிறது தென்மராட்சி. ஆனால் அந்த மண்ணும், மக்களும் சளைக்கவில்லை. வெறுங்கையுடன் இடம் பெயர்ந்தவர்களை ஆதரித்து தழுவியணைத்துப் பாதுகாக்கின்றனர்.

இது எமது விடுதலைப்போருக்கு தென்மராட்சி தந்த ஒப்பற்ற பங்களிப்பு. வரலாற்றில் என்றுமே அழிக்க முடியாத பதிவு. விடுதலைப் போராட்டப் பங்களிப்பில் ஏற்கனவே தென்மராட்சி மக்களுக்கு தனித்துவமான முத்திரைகள் உண்டு. சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதல், லெப். கேணல் சீலனின் வீரச்சாவு, இந்தியப் படையினர் மேல் நடத்தப்பட்ட தாக்குதல்கள் எனப் போராட்டப் பங்களிப்பு கொஞ்சநஞ்சமல்ல. எத்தனையோ தளபதிகளையும், போராளிகளையும், மாவீரர்களையும் எமது விடுதலைப் போராட்டத்திற்கு அள்ளித் தந்த மண்.

இன்றும் அதே உறுதியுடனும், அதே வேகத்துடனும், அதே இலட்சிய வேட்கையுடனும் தமிழ் மக்களின் ஐக்கியம் என்ற பேராயுதத்தைக் கையிலேந்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையில் அணி திரண்டு நிற்கின்றனர் தென்மராட்சி மக்கள்.

முள்ளிவாய்க்காலில் எமது ஆயுதப்போர் மௌனிக்கப்பட்டது. எமது இலட்சியம் என்றும் மௌனிக்காது. ஐக்கியம் என்ற ஆயுதத்தை கையிலேந்தி இறுதி வெற்றிவரை முன் செல்வோம்.





## 3 கோடி ரூபா செலவில் தென்மராட்சியில் முதலாவது காப்பெற் வீதி அங்குரார்ப்பணம்

கைதடி வடக்கையும் கைதடி தெற்கையும் இணைக்கும் மூத்தலாவத்தை வீதி கடந்த 53 வருடங்களாக திருத்தப்படாது பாவிக்க முடியாத நிலையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அவர்களின் 30 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் காப்பெற் வீதியாக்கப்பட்டது





13 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்[illegible]
செல்வா சனசமூக நிலைய[illegible]
கட்டிடத்திற்கான அடிக்கல் அமைக்கப்பட்டது



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களின் 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மறவன்புலோ மேற்கு கலையாபரணன் கோட்டை வீதி புனரமைக்கப்பட்டமை

## கிராமங்களை ஒளியூட்டல்



மட்டுவில் வளர்மதி பிரதேசம்

வரணி பாரதி சன சமூக நிலைய பிரதேசம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திப் பாதையில் முன் செல்லும் தென்மராட்சி

உரிமையுள்ள மக்களாக நாம் எதிர்த்து நிற்க முயன்றபோது எம்மீது கொடிய ஒடுக்குமுறை கட்டவீழ்த்து விடப்பட்டது. ஆயுத வன்முறைகளால் எமது மண்ணில் குருதி வெள்ளம் பாயவிடப்பட்டது. எனவே எம்மையும், எமது உரிமைகளையும் பாதுகாக்க எமது மண்ணை விடுவிப்பதே ஒரே வழி என்பதை உணர்ந்து கொண்டோம். எனவே எம்மீது தொடுக்கப்பட்ட இன அழிப்புப் போருக்கு எதிராக தற்காப்புப்போரை நடத்த நிர்ப்பந்திக்கப்பட்டோம்.

30 ஆண்டுகள் தொடர்ந்த முறையில் தியாகங்களாலும் அர்ப்பணிப்புக்களாலும் ஒரு புதிய வரலாறு படைத்தோம். வெற்றியை நோக்கி வேகமாக முன் சென்று கொண்டிருந்தபோது தான் எம்மீது சர்வதேசச் சதிவலை விரிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் மண்ணில் எமது ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டது. போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. ஆனால், என்ன காரணத்தால் 30 வருட போரும், போரின் அவலங்களும் தொடர்ந்தனவோ அது அப்படியே தான் இன்னும் இருக்கிறது. எனவே தான் கொழுந்து விட்டெரியும் எமது உரிமை வேட்கையும் இன்னும் எரிந்துகொண்டேயுள்ளது.

இந்த நிலையில் எமது போராட்டம் ஜனநாயக வழியில், தந்திரோபாய நகர்வுகள் மூலம் எமது ஐக்கியத்தையே ஆயுதமாகக் கையிலெடுத்து முன்னேற வேண்டியுள்ளது. தளர்ந்துவிடப்போவதில்லை. இறுதி வெற்றி வரை ஓய்வில்லை. ஆனால் போர் முடிந்தபோது எம்மிடம் இடிபாடுகளே எஞ்சிக்கிடந்தன. வளமும், வனப்பும் கொண்ட எமது மண் அழிவுகளாலும், அநீதிகளாலும் கறை படிந்துவிட்டது. விழுந்தவர்கள் விழுந்தவர்களாக அழிந்துபோக முடியுமா? இல்லை.! நாம் விழ விழ எழுவோம். புழுதி மேட்டிலிருந்து புதிதாக முளைவிடும் வலிமை படைத்தவர்கள் நாங்கள். எனவே உரிமைப் போராட்டத்தில் உறுதி குன்றாத நாங்கள் அபிவிருத்திப் பாதையிலும் முன் செல்வோம். நாடாளுமன்ற உறுப்பினர் இல்லை! அபிவிருத்தியில் முன் செல்ல சாவகச்சேரி தேர்தல் தொகுதிக்கான தனியான ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் இல்லை.

அடிப்படையில் அது ஒரு குறைபாடாக இல்லை! அபிவிருத்திப் பணிகள் தளர்வடைந்து விடவில்லை! தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் தனக்காக நிதி ஒதுக்கீட்டில் தென்மராட்சியின் அபிவிருத்தித் தேவைகளை மேற்கொண்டு வருகிறார்.

கல்வி, சுகாதாரம், சமூக சேவைகள், உட்கட்டுமானங்கள் எனப் பல்வேறு முனைகளில் அவரின் பணிகள் விரிகின்றன. அது மட்டுமல்ல! இனியும் தொடரும்! இன்னும் தொடரும்! ஏனெனில் உரிமையும், அபிவிருத்தியும் எமது இரு கண்கள்! துள்ளித்திரியும் மழலைச் செல்வங்களின் சுதந்திரத்திற்காகவும், சுபீட்சமுமான எதிர் காலத்திற்காகவும் கரம் கோர்த்து முன்செல்வோம்



2 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கொடிகாமம் தவசிக்குளம் பொதுநோக்கு மண்டபம் புனரமைக்கப்பட்டு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனால் மக்கள் மயப்படுத்தப்பட்டது.



கைதடி கிழக்கு துர்க்கா சன சமூக நிலையத்திற்கு ரூபா 2 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு சுற்றுமதில் அமைக்கப்பட்டு அழகாக்கப்பட்டது



யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டிகளுக்கு பிரதம விருந்தினராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் கலந்து சிறப்பித்தார்



4 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அமைக்கப்பட்ட திறன் வகுப்பறையை திறந்து வைத்தார்



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களின் 3 லட்சத்து 60,000 ரூபா நிதி ஒதுக்கீட்டில் எழுதுமட்டுவாள் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு திறன் வகுப்பறை அமைத்தமை




வரணி செல்வா சனசமூக நிலையத்திற்கு மின்னிணைப்பு வழங்கியமை



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களின் 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வரணி மாசேரி ஐயபாத்து மயானத்தில் இளைப்பாறும் மண்டபம் அமைத்தமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சியின் இரண்டாவது பொது விளையாட்டு மைதானம்




முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன் அவர்களின் 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கைதடியில் அமைக்கப்பட்ட தென்மராட்சியின் இரண்டாவது பொது விளையாட்டு மைதானத்தின் வேலைகளை ஆரம்பித்த தருணம்




கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலைய 60ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெற்ற மாவட்ட அடிப்படையிலான செற்றப் கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் பிரதம விருந்தி-னராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.




கைதடி குமரநகர் விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்ட தாச்சிப்போட்டியின் இறுதிப் போட்டியில் பிரதம விருந்தினராக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்



விளையாட்டுக் களங்கள் உடலாரோக்கியத்தை வலுப்படுத்து கின்றன, மன ஆரோக்கியத்தைப் பேணுகின்றன. கைதடி செவென்ஸ்ரார் விளையாட்டுக்கழக உறுப்பினர்களுடன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

**விளையாட்டு ஆரோக்கியமான உடலையும் சலனமற்ற உள்ளத்தையும் உருவாக்குகிறது.**

**தோல்விகளிலிருந்து வெற்றியை நோக்கி நகரவும், வெற்றியிலிருந்து அடுத்த வெற்றிக்கு முன்செல்லவும் மனத் தெம்பை அளிக்கிறது.**




மட்டுவில் மோகனதாஸ் இளைஞர் கழகம் நடாத்திய கிறிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து சிறப்பித்தார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவாயுதத்தைக் கையிலெடுப்போம் அகிலத்தை வெற்றி கொள்வோம்

## ஏன்?

அண்மையில் மட்டக்களப்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆனையிறவில் 3000 ம் படையினர் கொல்லப்பட்டது தொடர்பாக உடனடியாக ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்று அமைத்து விசாரணை நடத்தவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான நளின் திசநாயக்க கேட்டுள்ளார். அப்படியானால் அவர் ஏன் முள்ளிவாய்க்காலில் 4000 பேரைக் கொல்ல படையினரை வழிநடத்தியதாக குற்றம் சாட்டப்படும் கோத்தபாய ராஜபக்சவை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்கும்படி ஏன் கோரவில்லை.

ஏன்? ஏன்? ஏன்?

## எப்படி?

அண்மையில் பலாலி, வசாவிளான் மக்களுடனான சந்திப்பை நடத்திய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தனக்கு மக்கள் அரசியல் பலத்தைத் தந்தால் இரண்டு, மூன்று வருடங்களுக்குள் இராணுவத்தினர் கைப்பற்றியுள்ள முழுக்காணிகளையும் விடுவிக்கமுடியும் எனத் தெரிவித்தார். மூன்றுமுறை அமைச்சராக, அமைச்சரவை அந்தஸ்து கொண்ட அமைச்சராக அரசியல் பலத்துடன் பதவி வகித்தபோது விடுவிக்கப்படாத காணிகளை இப்போது எப்படி விடுவிக்கப்போகிறார்?

### சோக்கிரட்டீஸ் நாடகத்திலிருந்து

எழில் மிக்க ஏதென்ஸ் நகரத்தின் ஏற்றம்மிக்க வாலிபர்களே! நாற்றம் இருந்த சமுதாயத்திலே நறுமணம் கமழ ஓடிவாருங்கள் ! ஓடி வாருங்கள் ! விவேகம் துணைக்கு வராவிட்டால் தீட்டிய வாள்களும் திகைவெடுக்கும் தோள்களும் பயனற்றுப் போய் விடும். தோழர்களே நான் என் உதவிகளிடம் தருவது அறிவாயுதம். உலகையே மாற்றும் உன்னத பேராயுதம்! எதையும் ஏன், எதற்கு, எப்படி என்று கேளுங்கள். அக் கேள்விகளின் விடைகளில் உண்மைகளின் தரிசனம் உதவிகளுக்குக் கிட்டும், உலகை மாற்றும் வழியைத் திறக்கும்

## எப்படி

கருணா என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் அறிந்தளாவில் புத்த பிக்குகளைக் கொன்றார் எனவும் தலதாமாளிகைத் தாக்குதலில் சம்பந்தப்பட்டாரெனவும், மகா போதித் தாக்குதலில் கலந்துகொண்டாரெனவும் குற்றம் சாட்டப்படுவதுடன், போர்க் குற்றவாளியாக விசாரிக்கப்படவேண்டிய அவருக்கு மஹிந்த அரசு நியமன நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வழங்கியது எப்படி என்று கேள்வி எழுப்பப்படுகிறது. அப்படியானால் போர்காலத்தில் ஊடகவியலாளர்களைக் கொலைசெய்ததாகவும், ஊடகங்கள் மேல் தாக்குதல் தொடுத்ததாகவும், வீதி வீதியாக போராளிகளின் ஆதரவாளர்களைச் சுட்டுத்தள்ளியதாகவும், இளைஞர்களைக்காணாமல் ஆக்கியதாகவும் குற்றம் சாட்டப்பட்ட ஈ.பி.டி.பி கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு மூன்று முறை அமைச்சர் பதவி வழங்கப்பட்டது

எப்படி? எப்படி? எப்படி? எப்படி?



மீண்டும் மீண்டும் படையினரின் கொடுமைகளில் பாதிக்கப்பட்ட நாவற்குழி ! இழப்புக்களால் நொந்து போனவர்கள் மீண்டெழ வழி காட்டும் கலந்துரையாடல், நாவற்குழி தெற்கு மக்களுடன் ஈ.சரவணபவன் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)



வரணி இயற்றாலை மக்களின் தேவைகளைப் பற்றிய கலந்துரையாடல்



30 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கச்சாய் பாலாவி கந்தபுராண முருகன் ஆலய வீதியைப் புனரமைத்தமைக்காக அக் கிராம மக்களால் கந்தபுராண முருகன் ஆலயத்தில் மண்ணின் மைந்தனுக்கு கௌரவிப்பு வழங்கப்பட்டது



மல்டி மீடியா ப்றொஜெக்டர் வழங்கியமை



வரணி சண்முகானந்தா சனசமூக நிலையத்திற்கு மின்சார இணைப்பு வழங்கியமை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



கொடிகாமம் தெற்கு தவசிக்குளம் மக்களுடனான கலந்துரையாடல்



17 லட்சத்து 50000 ரூபா நிதி ஒதுக்கீட்டில் சரசாலை வடக்கு நித்திலா மகளிர் சங்க கட்டிடம் அபிவிருத்தி செய்யப்பட்டமை



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அவர்களின் 5 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் சாவகச்சேரி நகரசபையின் முக்கிய பிரதேசங்களுக்கு வீதி விளக்குகள் (LED) பொருத்தப்பட்டன



தென்மராட்சி முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சீருடை வழங்கல்



மட்டுவில் கலைவாணி சனசமூக நிலையத்தில் அப்பகுதி மக்களின் தேவைகள் பற்றி ஆராயப்பட்டது.



வரணிப் பிரதேசத்தில் அமைந்துள்ள தல்வளைப்பிள்ளையார் கோவில் வீதி 20 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைத்தமை



நாவற்குழி தெற்கு கோவிலாக்கண்டி மக்களுடனான கலந்துரையாடல்



கைதடி ஊரியான் மக்களுடன் சமகாலக் கலந்துரையாடல்.



15 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கெற்பேலி பாலாவி இணைப்பு வீதி புனரமைத்தமை



வரணி நவா சனசமூக நிலையத்திற்கு தளபாடங்கள் வழங்கப்பட்டமை

எங்கள் உரிமையின் சின்னம்
எங்கள் வெற்றியின் இலக்கம்

X4

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறுசுகளும் முள்ளிவாய்க்கால் நினைவுகளும்

வவுனியா முள்ளிக்குளமூடாக மன்னாரை நோக்கி விரிந்த அரச படைகளின் ஆக்கிரமிப்புப்போர் இறப்புக்களையும், இழப்புக் களையும், இடப்பெயர்வுகளையும், வறுமையையும், பட்டினியை யும் எங்கள் மக்கள் மீது விதைத்தவாறு மெல்ல மெல்ல முள்ளி வாய்க்கால் நோக்கி முன்நகர்ந்தது.

உயிரிழப்புக்கள், உடலூனங்கள், வறுமை, நோய் எனத் துய ரங்கள் மலையாக குவிந்து எமது மக்களை வதைத்தன.

கொடிய போரின் குருதி குடிப்பில் எங்கள் மழலைகள் மட்டும் தப்பிவிட முடியுமா?

பிறந்தபோது கொடுப்பதற்கு தாயின் முலையில் பாலில்லை! கரைத்துக் கொடுக்கப் பால்மா இல்லை. எறிகணைகள் எங்கள் பிள்ளைகளைப் பலிகொண்டபோது அவர்களை அடக்கம் செய்ய் சவப்பெட்டி இருக்கவில்லை.

ஏறிகணைச் சிதறலில் தாய் மடியில் உயிர்விட்ட குழந்தை கள், தாய் இறந்ததை அறியாமல் தாயின் முலையைத் சூப்பிய மழலைகள். இவையெல்லாம் முள்ளிவாய்க்கால் எழுதிவைத்த கொடுமைகள்.

மழலைகளுக்கு பால்மா வாங்க வரிசையில் நிற்க எறி கணை விழுந்து சிதறிப்போன தாய்மார், கஞ்சி வாங்க வரி சையில் நின்று எறிகணையில் பலியான பிஞ்சுகள் என எமது சிறுசுகள் மேல் விதைக்கப்பட்ட கொடுமைகள் ஏராளம்.

இப்போது போர் முடிந்து விட்டது! ஆனால் போரில்பட்ட வடுக்கள் மறையவில்லை. எனவே இன்று எம்முன் ஆரோக்கியமான பிள்ளைகளாக, கல்வியறிவு கொண்ட சமூகமாக, மகிழ்ச்சி பொங் கும் மனிதர்களாக, மழலைகளை வளர்க்க வேண்டியது எமது பொறுப்பு!

அந்தப் பாரிய பொறுப்பில் தானும் ஒரு பங்காளியாக இணைந்து பணியாற்றுவதில் மனம் நிறைவு கொள்கிறார். எமது முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன்.



கைதடி சனசமூக நிலையங்களின் ஒன்றியங்களின் ஏற்பாட்டில் நடைபெற்ற இராணுவத்தால் கொல்லப்பட்ட தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க பணியாளர்களின் நினைவேந்தல் நிகழ்வு



கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தின் வைரவிழாவில் பிரதம விருந்தினராக யாழ்.கிளி-நொச்சி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கலந்து சிறப்பித்தார்



அல்லாரை டெல்ரா விளையாட்டுக்கழக வீரர்களையும் ஊர் அபிமானிகளையும் சந்தித்து தேவைஅறியும் கலந்துரையாடலில் ஈடுபடும்போது

## மழலைகளின் மகிழ்களம் - 2018




ஓடி விளையாடு பாப்பா -ஒரு குழந்தையை வையாதே பாப்பா

## மழலைகளின் மகிழ்களம் - 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தமிழ் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவன் என்ற முறையில் சகல தொகுதி மக்களுக்கும் சேவைசெய்யக் கடமைபட்டவன். அதேவேளையில் எனக்கு தனிப்பட்ட வகையில் சாவகச்சேரி தொகுதிக்கு சேவை செய்யவேண்டிய கடப்பாடும் உண்டு.

ஏனெனில் நான் சாவகச்சேரி மண்ணின் மைந்தன். நான் சிறுவயதில் வளர்ந்த ஊர் சரசாலை. நான் சிறுவயதில் மண்ணில் தவழ்ந்து விளையாடியபோது அள்ளித் தின்ற சரசாலையின் மண். அது எனது இரத்தத்தில் கலந்து ஓடுகிறது.

எனவே என்னை உரிமை கொண்டாட சாவகச்சேரி மக்களுக்கும், சாவகச்சேரி மக்களை- உரிமை கொண்டாட எனக்கும் பாக்கியதை உண்டு என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று நான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளனாக மக்கள் முன் நிற்கிறேன்.

நான் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு உங்கள் வாக்குகளையும், விருப்பு வாக்கை எனக்கும் வழங்கும்படி கேட்பது உங்களுக்கு நான் செய்த சேவைக்கு கைமாறாக அல்ல. மாறாக தொடர்ந்தும் சேவைசெய்ய அங்கீகாரமும் வாய்ப்பும் பெறுவதற்காக!

எமது உரிமைப் போராட்டத்தை தடம் மாறாது முன்னெடுத்துச் செல்ல!

## நாவற்குழி குடும்ப முன்பள்ளிகளின் மகிழ்களம்







கைதடி நுணாவில் குச்சாப்பிட்டி மயானம் மண்ணின் மைந்தனின் நிதி ஒதுக்கீட்டில் 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்டது



கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் கலை நிகழ்வும் மற்றும் பரிசளிப்பு விழாவில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்

## சங்கத்தானை முன்பள்ளி மகிழ்களம்









10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கைதடி குமரநகர் நிறைமதி [illegible]க்கு சிறுவர் பூங்காத் தொகுதி வழங்கி வைக்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.சரவணபவன் தான் ஈடுபடுகின்ற துறையின் கடின உழைப்பை நல்கி, தன்னை அர்பணித்து நிற்கின்ற ஒருவராவார். உதயன் நிறுவனத்தையும், உதயன் நாளேட்டையும் ஆட்சியாளர்களினதும் இராணுவ ஆதிக்கத்தினதும் அடக்குமுறை, அழிப்பு நடவடிக்கைகள், கொலை அச்சுறுத்தல்கள் என்பவற்றில் இருந்து பாதுகாத்து வளர்த்தெடுத்து மக்களின் கருத்துச் சுதந்திரத்தை மேம்படுத்தி நிற்பதில் அர்ப்பணிப்பையும் துணிச்சலையும் வெளிப்படுத்தி நிற்கின்ற ஒருவராவார். அதற்கும் மேலாக "தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலை" என்ற உன்னத இலட்சியத்திற்காக அயராது இலக்குத் தவறாது மக்களைக் கட்டியெழுப்புவதில் உதயன் குழுமம் பெரும் பங்காற்றுகிறது.

ஊடக சுதந்திரம் இலங்கையில் அடக்குமுறைக்கு உள்ளானபோதும் அந்தச் சுதந்திரத்தை நிலைநாட்ட உதயன் குழுமம் பெரும் அர்ப்பணத்தைச் செய்திருக்கிறது. அதுபோல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டதிலிருந்தும் மக்கள் மத்தியில் திரு.சரவணபவன் பெரும் சேவையாற்றி வருகிறார்.

பாதிக்கப்பட்ட துன்பப்பட்ட மக்கள் மத்தியில், உதவும் நிறுவனங்களிடம் தொடர்புகொண்டு பல நலத்திட்டங்களைச் செய்து வருகிறார்.

திரு.சரவணபவன் உதயன் குழுமத்தையும், செய்தியாளர்களையும் கூட மக்கள் சேவைக்காகவே செயற்பட வைக்கிறார். உதயன் குழுமத்திற்கு நெருக்கடிகள் ஏற்பட்டபோது அவற்றை துணிச்சலுடன் எதிர்கொண்டு தீர்வுகண்டு வெற்றிபெற்ற ஒரு உழைப்பாளர் என்று குறிப்பிடலாம்.

- மாவை சேனாதிராசா
(தலைவர்-தமிழரசு கட்சி)

## பாராளுமன்றத்தில் இருந்து

வன்னியில் போரால் பாதிப்புற்று தம் துணைவர்களை இழந்து, வாழவழியற்று நிற்கும் இளம் தாய்மாரின் கண்ணீரைத் துடைக்க அரசு கரம் தரவில்லை. அவர்களுக்கு ஒரு சிறுதுளி உதவியைக்கூட செய்வதற்கு அரசுக்கு மனம் இல்லை. இதனால் இன்னமும் இவர்கள் வாழ வழி தெரியாமல் பிறரிடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால், இவர்களுக்கு இத்தகைய பாதிப்பை நிகழ்த்திய போரில் பங்கெடுத்த படையினருக்கு அவர்களின் குழந்தைகளுக்கு ஊக்குவிப்பை வழங்க முன்வந்திருக்கும் அரசு, இந்த ஏழைத் தாய்மாருக்கு என்ன செய்யப்போகிறது? தமது அவயவங்களை இழந்து தவிக்கும் சிறுவர்களுக்கும் ஏனையோருக்கும் என்ன மருந்து தரப்போகிறது? சிறுகச்சிறுகச் சேர்த்த பணத்தில் வசதியாக வாழ்ந்து விட்டு இன்று தங்க இடமில்லாமல் அதிகளாகவே அலைந்து கொண்டிருக்கும் மக்களுக்கு அரசு செய்யப்போகும் பிராயச்சித்தம் தான் என்ன? என்ற கேள்வி இங்கு எழுகிறது.

-ஈ.சரவணபவன்
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)

# பத்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் தென்மராட்சிப் பிரதேச விளையாட்டுக்கழகங்களுக்கும், இளைஞர் கழகங்களுக்குமான விளையாட்டு உபகரணங்கள் வழங்கல்


சங்கத்தானை சிறிமுருகன் விளையாட்டுக்கழகம்


மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம்


மீசாலை ஸ்ரீ விநாயகர் விளையாட்டுக்கழகம்


கைதடி நவசக்தி விளையாட்டுக்கழகம்


மந்துவில் சேகுவரா விளையாட்டுக்கழகம்


கைதடி வளர்மதி விளையாட்டுக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களின் 2 லட்சத்து 50,000 ரூபா நிதி ஒதுக்கீட்டில் நாவற்குழி அற்புத அன்னை பாலர் பாடசாலை அபிவிருத்தி செய்யப்பட்டமை



நுணாவில் அம்பாள் சனசமூக நிலையத்திற்கு மின்சார இணைப்பு வழங்கியமை


நாவற்குழி ஜயனார் சனசமூக நிலையத்திற்கு பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்கியமை


பாலாவி பால்நிலா சனசமூக நிலையத்திற்கு மின்சார இணைப்பு வழங்கியமை


யா/கெற்பேலி அ.த.க. பாடசாலைக்கு பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்கியமை


தச்சன்தோப்பு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்திற்கு மின்சார இணைப்பு வழங்கியமை


கச்சாய் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகத்திற்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கியமை



நாவற்குழி சரஸ்வதி சனசமூக நிலையத்திற்கு மின்சார இணைப்பு வழங்கியமை


முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களின் 6 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் எழுதுமட்டுவாள் இரேணியன் மயான இளைப்பாறும் மண்டபம் அமைக்கப்பட்டமை


கெற்பேலி பொதுநோக்கு மண்டபத்திற்கு மின்சார இணைப்பு வழங்கியமை


முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களின் 25 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில சாங்கத்தானை ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய முன்பள்ளி அபிவிருத்தி செய்யப்பட்டமை


முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களின் 22 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில கச்சாய் கலைமகள் விளையாட்டுக்கழக மைதானம் சீரமைக்கப்பட்டமை


முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களின் 4 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கைதடி ஊரியான் மயானம் அபிவிருத்தி செய்யப்பட்டது


முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களின் 4 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கெற்பேலி சிவசக்தி முன்பள்ளி அபிவிருத்தி செய்யப்பட்டது


முன்னாள் பாராளுமன்ற உறுப்பி-னர் ஈ.சரவணபவன் அவர்களின் 4 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் எழுதுமட்டுவாள் ஸ்ரீ கணேசா மகாவித்தியாலயத்திற்கு திறன் வகுப்பறை அமைத்தமை


எழுதுமட்டுவாள் விநாயகர் சனசமூக நிலையத்திற்கு மின்சார இணைப்பு வழங்கியமை


நாவற்குழி உதயதாரகை சனசமூக நிலையத்திற்கு தளபாடங்கள் வழங்கியமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்விகள் ! கேள்விகள் ! கேள்விகள்

## கேள்விகள் ! கேள்விகள் ! கேள்விகள் ! கேள்விகள் மூட்டிய தீயினில் எழுந்தன நீதிகள் ! நீதிகள் ! நீதிகள் !

**கேள்வி** : தற்சமயம் வடபகுதித் தேர்தல் களத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் கூட்டணி, தமிழ் தேசிய மக்கள் முண்ணனி, ஈழ மக்கள் ஜனநாயக்கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி, சுயேட்சைக் குழுக்கள் எனப் பலதரப்பினரும் போட்டியிடுகின்றனர். இப்படியான நிலையில் நாம் ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களிக்க வேண்டும்.

**பதில்**: தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் விடுதலைப் பிரதேசங்களை உருவாக்கி எமது சொந்த நிர்வாகக் கட்டமைப்பு, நிதி, நிர்வாகம், படையணிகள் என விடுதலையை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த நிலையில் பல்வேறுபக்கமாக சிதறிக்கிடந்த தமிழ்த் தலைமைகளை ஜக்கியப்படுத்தி ஒரே அணியில் கொண்டு வரவும், தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஜனநாயகக் குரலாக ஒலிக்கவுமே தலைவர் பிரபாகரனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஒரு புறம் ஆயுதப்போராட்டம் வெற்றியை நோக்கி முன்சென்ற வேளையில் அதன் ஜனநாயக வடிவமாக உருவாக்கப்பட்டதே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு.

எனவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் உரிமைப்போராட்டத்திலிருந்து எவ்விதத்திலும் பிரிக்கப்பட முடியாததாகும். எனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மிது தமிழ் மக்கள் கொண்டுள்ள உறவும், தமிழ் மக்கள் மீது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கொண்டுள்ள உறவும் நிரந்தரமானது என்றும் எவராலும் அசைக்க முடியாதது.

எனவே தான் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் உரிமையைத் தமிழ் மக்கள் ஒவ்வொரு தேர்தல்களிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கே வழங்கி வருகின்றனர்.

அதே வேளையில் தமிழ் தேசிய மக்கள் முண்ணனியினர், தமிழ் மக்கள் கூட்டணியினர் ஆகிய தரப்பினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவர்கள் தமிழ் மக்களின் ஐக்கியத்திற்காக உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பை விட்டு வெளியேறி அதைப் பலவீனப்படுத்தியதன் மூலம் ஒற்றுமை என்ற உன்னத நோக்கத்திற்கு ஊறுவிளைவித்தவர்கள் அது மட்டுமன்றி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகளில் அதிருப்தியுற்று வெளியேறிய அவர்கள் தமிழ் மக்களுக்கு என்ன செய்தார்கள்? இனப்பிரச்சனைத் தீர்வு, காணி விவாகாரம், காணாமற் போனோர் பிரச்சனை, அரசியல் கைதிகள் விடுதலை என்பன தொடர்பாக ஆர்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டார்களா? மக்களை அணி திரட்டி ஜனநாயகப் போராட்டங்களை நடத்தினார்களா? மக்கள் தாமாக நடத்திய போராட்டங்களைத் தலைமையேற்று ஒன்றிணைத்து கூர்மைப் படுத்தினார்களா? பத்திரிகை அறிக்கைகள் விடுப்பதையும், ஊடக சந்திப்புக்கள் நடத்துவதையும் விட அவர்களால் எமது மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க ஏதாவது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவா? மாறாக தமிழ் தேசியக் கூட்டமைப்பைக் குற்றம் சுமத்துவது, கண்டிப்பது போன்றவற்றை தொடர்ந்து மேற்கொண்டு வருவதன் மூலம் தமிழ் தேசியக்கூட்டமைப்பை மக்கள் மத்தியிலும், சர்வதேச அரங்கிலும் செல்வாக்கிழக்க வைக்கும் நோக்குடனேயே செயற்பட்டு வருகின்றனர்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பை அழித்து அல்லது பலவீனப்படுத்த சிங்களப் பேரினவாதிகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பல முயற்சிகளையும் செய்து வருகின்றனர். அதே பணியையே இவர்களும் செய்து வருகின்றனர். அதாவது தமிழ் தேசியக் கூட்டமைப்பை அழித்து தமிழ் மக்களின் பலத்தைச் சிதைப்பதில் இவர்களும் அரசாங்க தரப்பினரும் ஒரே நோக்கத்தில் ஒன்றுபட்டுள்ளனர். இவர்களை ஆதரித்து தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே பலவீனப்படுத்திக் கொள்ள முடியுமா?

தமிழ் மக்களின் மீதான இன அழிப்பை மேற்கொண்டது மட்டுமின்றி தமிழ் மக்கள் மீதான கொடிய ஒடுக்குமுறைகளையும் தொடர்ந்து கொண்டிருக்கும் ஆட்சியாளர்களின் பிரதிநிதிகளாகப் போட்டியிடும் டக்ளஸ் அணியையும், அங்கயன் அணியையும் நாம் ஆதரிக்க முடியுமா? ஜனாதிபதியும், அமைச்சர் வீமல் வீரவன்சவும் தமக்கு தமிழ், முஸ்லீம் வாக்குகளுக்கு கெஞ்சப்போவதில்லையெனத் தெரிவிக்கப்பட்ட பின்பு இவர்கள் என்ன முகத்துடன் தமிழ் மக்களிடம் வாக்குக் கேட்டு வருகின்றனர் என்பதை புரிந்து கொள்ள முடியவில்லை.

எனவே நாம் வீட்டுச் சின்னத்திற்கு வாக்களித்து தமிழ்தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெற வைப்பதே இனப்பிரச்சனைத் தீர்வை எட்டவும் எம்மீது மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறைகளைத் தடுத்து நிறுத்தவும் எம்முன் உள்ள ஒரே மார்க்கமாகும்.

**கேள்வி**: கடந்தகால அனுபவங்களிலும் தமிழ் மக்களின் எதிர்காலமும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு அதாவது வீட்டுச்சின்னத்திற்க வாக்களித்து அதைப் பலப்படுத்துவதற்குப் வேண்டிய அவசியத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது. அதே வேளையில் எமது விருப்பு வாக்குகளை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அவர்களுக்கு, அதாவது 4 இலக்கத்திற்கு ஏன் வழங்க வேண்டும்?

**பதில்** : 2010 ஆம் ஆண்டிலேயே சரவணபவன் அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக முதலில் தெரிவு செய்யப்பட்டார். அவர் நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த காலங்களில் நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களின் உரிமைக்குரலை ஓங்கி ஒலித்ததுடன் எமது மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சனைகளையும் அக்கறையுடன் மக்கள் அவையின்முன் வைத்து வந்தார். அது மட்டுமன்றி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்படும் நிதி மூலமாக மட்டுமன்றி அமைச்சர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு சில திட்டங்களைப் கேட்டுப்பெற்றும், ரோட்டரி கழகம் மூலம் மக்களுக்கான பல அபிவிருத்திப் பணிகளையும், வாழ்வாதார உதவிகளையும் மேற்கொண்டு வந்ததையும் நாம் அறிவோம்.

அதே வேளையில் அவர் நாடாளுமன்ற உறுப்பினராக முன்பும் சரி, நாடாளுமன்ற உறுப்பினரான பின்பும் சரி உயிர் அச்சுறுத்தல் மத்தியிலும் உதயன் பத்திரிகையைத் தமிழ் தேசியத்தின் குரலாக நடத்தி வந்தார். அதன் காரணமாக 14 தடவைகள் ஒட்டுக்குழுக்களாலும், துணை இராணுவக்குழுக்களாலும் பத்திரிகை நிறுவனம் தாக்கப்பட்டது. அதன் காரணமாக உதயன் பணியாளர்கள் கொல்லப்பட்டனர். ஆசிரியர், செய்தி ஆசிரியர் ஆகியோர் மேல் மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சியில் அவர்கள் படுகாயமடைந்தனர். பணியாளர்கள், விநியோகஸ்தர்கள் படுகாயப்படுத்தப்பட்டனர்.

இவ்வாறான நெருக்கடிகள் மத்தியிலும் உதயன் தமிழ் மக்களின் தேசியக் குரலாக ஒலித்து வருகிறது. எனவே அவர் நாடாளுமன்ற உறுப்பினராகவும், உதயன் ஊடகம் மூலமும் செய்யும் பணிகளை மேலும் மேம்படுத்தவும் தமிழ் தேசியத்தை முன்னெடுத்துச் செல்லவும் அவர் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட வேண்டும்.

அதே வேளையில் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்குள் இடையில் புகுந்து பிற்போக்கு சக்திகள் தியாகங்களாலும், அர்ப்பணிப்புக்களாலும் முன்னெடுக்கபட்ட எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதம் எனக் கொச்சப்படுத்தியும் எமது போராளிகள் போர்க் குற்றம் தொடர்பாக விசாரிக்கப்பட வேண்டுமெனவும் கூறி எமது புனித போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி ஒடுக்குமுறையாளர்களைத் திருப்திப் படுத்தும் சக்திகளிடமிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை காப்பாற்ற கூட்டமைப்புக்குள் சரவணபவனைப் பலப் படுத்துவது முக்கியமாகும்.

எனவே எமது உரிமைப் போராட்டத்தை முன்னெடுக்கவும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை திசை திருப்ப முயலும் நாசகார சக்திகளிடமிருந்து காப்பற்றவும் நாம் இலக்கம் 4 க்கு விருப்பு வாக்கை வழங்க வேண்டும்.

## விகிதாசார தேர்தலும் வாக்காளர்களுக்கான வரப்பிரசாதமும்

**தொகுதிவாரியான தேர்தலின் போது கட்சிகளால் தெரிவுசெய்யப்படும் அந்தந்தக் கட்சிகளின் ஒவ்வொரு வேட்பாளர்கள் மத்தியிலிருந்து வாக்காளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்யப்பட வேண்டும். அதாவது வாக்காளர்களின் உரிமை, கட்சியின் தெரிவுக்குள்ளேயே மட்டுப்படுத்தப்பட்டு விடுகிறது. ஆனால் விகிதாசாரா தேர்தலின் போது ஒவ்வொரு கட்சியினரும் ஒரு குறிப்பிட்ட தொகை வேட்பாளர்களை நிறுத்தவேண்டும். எனவே கட்சியைத் தெரிவு செய்யும் உரிமையும் அந்தக் கட்சியின் சார்பில் போட்டியிடுபவர்களில் தங்களுக்கு விருப்பமானவர்களை தெரிவு செய்யும் உரிமையும் வாக்காளர்களுக்கே வழங்கப்படுகிறது. இது வாக்காளர்களுக்கு கிடைத்திருக்குமொரு வரப்பிரசாதமாகும். தமிழ் மக்கள் தமது உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் சக்தியாகவும் ஜனநாயகப் போராட்டத்தை முன்னெடுக்க தலைவர் பிரபாகரன் அவர்களால் உருவாக்கப்பட்டதாகவும் ஏற்றுக்கொண்டவகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமது தலைமை சக்தியாக தெரிவு செய்வதில் தமிழ் மக்களுக்கு எவ்விதமான குழப்பத்துக்கும் இடமில்லை.ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உரிமைப் போராட்டத்தின் வீச்சை மழுங்கடிப்பதிலும் சிங்களப் பேரினவாத சக்திகளை திருப்திப்படுத்தும் வகையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் ஆயுதப் போராளிகளையும் பயங்கரவாதிகளெனவும், போர்க் குற்றவாளிகளெனவும் சகோதரப் படுகொலையாளிகளெனவும் இழிவுபடுத்தும் வகையில் கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர். அவர்களும் அவர்களைச் சேர்ந்த சிலரும் தேர்தல் களத்தில் களமிறங்கியுள்ளனர்.**

**அதேவேளையில் உரிமைப்போராட்டத்தில் நேர்மையாக அர்ப்பணிப்புடன் பணியாற்றுபவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் போட்டியிடுகின்றனர்.எனவே கட்சித் தெரிவை பொறுத்தவரையில் தமிழ் மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிப்பதன் மூலம் தெரிவுசெய்வதில் உறுதியாக இருக்கமுடியும். அதேவேளையில் விருப்பு வாக்குகள் மூலம் விடுதலைப் போராட்டத்தையும், போராளிகளையும் கொச்சைப்படுத்தி ஆட்சியாளர்களை மகிழ்விக்கும் எதிரிகளின் அடிவருடிகளை நிராகரிக்கவும் சரியானவர்களையும் தெரிவு செய்யவும் முடியும். எனவே தமிழ் மக்கள் விருப்பு வாக்குகள் என்ற வரப்பிரசாதத்தை சரியான முறையில் பிரயோகித்து தமிழ் மக்களையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும், தமிழர் தேசியத்தையும் நச்சுக்கிருமிகளிடமிருந்து காப்பாற்றும்படி கேட்டுக்கொள்கிறோம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப் பத்திரிகை செ.பிரதாப் என்பவரால் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அருண் பிறிண்டேர்ஸில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


நாவற்குழி காந்தி விளையாட்டுக் கழகத்திற்கு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டது



கைதடி. நாவற்குழி மக்களின் வேண்டுகோளுக்கிணங்க 2 லட்சத்து 50000 ரூபா செலவில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன


முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களின் 15 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் விடத்தற்பளை ஸ்ரீ கணேசானந்தா சனசமூக நிலையம் அமைக்கப்பட்டமை


முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் கொடிகாமம் போக்கட்டி மக்களது குறைகேள் கலந்துரையாடலை மேற்கொண்டார்


தென்மராட்சி பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசத்திற்கென 4 லட்சம் ரூபா செலவில் கொள்வனவுசெய்யப்பட்ட 116 வீதி விளக்குகள் பிரதேசசபையில் ஒப்படைக்கப்பட்டன


நாவற்குழி வீரபத்திரர் கோவில் பிரதேசத்திற்கும், ஐயனார் கோயில் பிரதேசத்திற்கும் 10 LED மின் குமிழ்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபன் அவர்களின் நிதியில் [illegible]



அமரர் வை.கஜிநாத் ஞாபகார்த்தமாக துடுப்பாட்ட இறுதிச் சுற்றுப்போட்டியில் பிரதம விருந்தினராக மண்ணின் மைந்தன் அவர்கள்


4 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் யா/ கைதடி நுணாவில் அ.த.க. பாடசாலைக்கு திறன் வகுப்பறை அமைக்கப்பட்டமை


கைதடி பிரதேச பொதுஅமைப்புக்களோடு குறைகேள் அரங்கு


சங்கத்தானை இராக்கச்சி அம்மன் ஆலயத்தினை மேலும் மெருகூட்டும் வகையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சரவணபவன் அவர்களால் 2 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது


முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களின் 15 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கச்சாய் பிரதேச பொதுமண்டபம் மக்கள் தலைவனால் திறந்து வைக்கப்பட்டது


முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் அவர்களின் 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் வரணி கும்பிட்டான்புலம் வீதி அமைக்கப்பட்டது


வரணி விநாயகர் சனசமூக நிலையத்திற்கு மின்னிணைப்பு வழங்கப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org